gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புக். ருஅ] யாழ்ப்பாணம்—வியஸு மாசி மீ கஉ உ (1947 பெப்ரவரி 25 செவ்வாய்க்கிழமை)[இலஅ அ

# ஸ்ரீ ராமக்கிருஷ்ண பரமஹம்ஸர்

## 112-வது ஜெனனதினம்

### சென்ற 23-2-47-ல் அகிலமெங்கும் கொண்டாடப்பட்டது.

முன்னையோர் நமது நாட்டின் முனிவரர் தேடி வைத்த
முழுமுதல் ஞான மெல்லாம் மூடநம் பிக்கை யென்றும்
பொன்னையே தெய்வ மென்றும் போகமே வாழ்க்கை யென்றும்
மனிதரைக் கொன்று வீழ்த்தும் போரையே வீர மென்றும்
தன்னையே பரிதா யெண்ணித் தனக்குமேல் இருக்கும் வேறோர்
சக்தியின் நினைப்பே யின்றித் தருக்கியே பிறப்பின் மாண்பைத்
தின்னுமோர் மயக்கம் நீங்கித் தெளிந்திட எழுந்த ஞானத்
தீபமே ராம க்ருஷ்ண தேவனே போற்றி போற்றி.

காவியை உடுத்தி டாமல் கமண்டலம் எடுத்தி டாமல்
காட்டிடை அலைந்தி டாமல் கனலிடை நலிந்தி டாமல்
பூவுல கதனைச் சுத்தப் பொய்யென்றும் புகன்றி டாமல்
புறத்தொரு மதத்தி னோரைப் புண்படப் பேசி டாமல்
சேவைகள் செய்தாற் போதும் தெய்வத்தைத் தெரிவோம் என்று
தெளிவுறக் காட்டி நுய்உன் தினசரி வாழ்க்கை தன்னால்
தீவினை இருட்டைப் போக்கிச் செகமெலாம் விளங்கும் ஞான
தீபமே ராம க்ருஷ்ண தேவனே போற்றி போற்றி.

—நாமக்கல் கவிஞர்



இன்று உலகில் யுத்தபயம் நீங்கினபாடு இல்லை. பரஸ்பரம், சந்தேகம், பயம் என்பனவே தாண்டவமாடுகின்றன. மக்கள் உண்மையினை மறந்து, கடவுளைத் துறந்து கலங்கி வாடுகின்றனர். எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் என்ற உண்மையை மக்கள் கடைப்பிடிக்க பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர் வாழ்க்கை தக்க உதாரணமாம். அவன் போதனைகளே இன்று உலகுக்குச் சாந்தியளிப்பன. அவன் அருள் வாசகமே, உலகப்புண்களை ஆற்ற வல்லது. அவன் காட்டிய அன்புத் துவஜம் அவனி எங்கும் அருள் சுரக்குமாக. அதனை லட்சியமாகக் கருதி ஹிந்து சமுதாயம் இன்று அவன் புகழ் பாடித் தொண்டாற்றுமாக.

# வருகிறது! ஊழிக்கனல்

## அமெரிக்க ஆசிரியையின் எச்சரிக்கை

இன்று உலகவல்லரசுகளால் தாபிக்கப்பட்டு பல அரசாங்கங்களை அங்கத்துவமாகக் கொண்ட ஐக்கியதேச ஸ்தாபனத்தினால் உலகம் நன்மையடையப்போகிறதா? எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனமாய், ஓர் உலக இராச்சியத்தின்கீழ் மறுக்குலம் வாழ்ந்து ஈடேறுவதற்கு ஐக்கியதேச ஸ்தாபனம் உதவிசெய்யுமா? அப்படிச் செய்யும் என்று நினைப்பது வீண். இந்த ஸ்தாபனத்தின்மூலம் ஓர் சட்டிடத்தை நிர்மாணிக்கிறார்கள்தான். ஆனால் இது மணற் கட்டிடம். எப்போது தலைகிழாய்க் கவிழ்ந்துவிடும் என்று சொல்லமுடியாது.''

இவ்வாறு அமெரிக்காவின் பிரபல நூலாசிரியையும், சமூகச் சீர்திருத்தவாதியுமான ஸ்ரீமதி பேர்ல்பக் என்பவர் "யூனைற்றெட்நேஷன்ஸ்வேர்ல்ட்" என்னும் பத்திரிகையில் எழுதுகிறார். அவர் இவ்விஷயமாக மேலும் கூறுவதாவது:

"இன்று உலக மக்களுக்கு வேண்டியதுயாது? நல்லுணவு, சுகவாழ்க்கை, தக்க கல்வி, என்னும் மூன்றுமே உலகமக்களுக்குவேண்டற்பாலன. இந்த மூன்றையும் மக்களுக்கு அளித்து அவர்களைச் சந்தோஷமாக வாழச் செய்வதுதான் உலக சுபீட்சத்தை நோக்கமாகக் கொண்டுள்ளவர் கடமை. இந்த மூன்றனையும் பெற்று மனரம்மியமாக வாழ்பவர்களேஉலக சமாதானத்தைக் காப்பாற்ற வல்லுநரவர்; அவர்களே உலகசுதந்திரத்தைப் பாதுகாக்க உரியர்; எனவே; இன்று மக்களுக்கு உணவு கல்வி சுக வாழ்க்கையை அளிக்க வழிவகைகள் தேடவேண்டும். ஆனால் இன்று நடப்பது என்ன?

"உலகம் இன்று வறுமையும் அழுக்கும் பட்டினியும் குடிகொண்டுள்ள சேரிகளையே அதிகமாகக் கொண்டிருக்கிறது. கொடிய பரந்த பாலைவனத்தின் மத்தியில் ஓர் சிறு பசும்புற்றரைபோல, இந்த உலக சேரியிலும் ஓர்சில பணக்காரக்கும்பல்கள் இருக்கின்றன; இக்கும்பல்கள் இச்சேரிகளில் உள்ள அறியாமை, தரித்திரம், பட்டினி, நோய் என்பவற்றைப் பசளையாக ஈர்த்துக் கொழுத்துக் கும்மாளம் போடுகின்றது

"இன்று உலகம் இருக்கும் இந்நிலைமையிலே, சாந்தியும சமாதானமும் எங்கிருந்து வரப்போகின்றன. சாந்தியையும் சமாதானத்தையும் உலகுக்கு அளித்து அவற்றைப் பாதுகாக்கக்கூடிய மக்கள் இத்தகைய கேவல நிலையில் இருக்கிறார்கள். ஐக்கியதேச ஸ்தாபனத்திலே யுள்ளவர்கள் யார்? ஏழை மக்களின் இரத்தத்தைப் பிழிந்து குடித்து ஏப்பமிட்டு வாழும் [illegible] அரசாங்கப் பிரதிநிதிகளே இச்சங்கத்தில் இன்று அங்கம் வகிக்கிறார்கள்.

"அந்தோ! இந்த உலகிற்கு இனியும் மீட்சியில்லையா? சமாதானம் சாந்தி என்பன இனி ஓர்போதும் இப்பாழும் புவியில் நிலைநிற்கமாட்டாவா? இன்று ஆசியாக் கண்டத்திலே ஓர் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அக்கொந்தளிப்பு சாமானியமானதன்று. வடவாமுகாக்கினி போல அந்தக் கொந்தளிப்பு—அந்த விழிப்பு—இரைந்துகொண்டு உலகை நோக்கி வருகிறது. அந்த வடவாமுகாக்கினியில் முதலாளிக் கும்பல்கள் புழுப்போல் மாளுகின்றன. அறியாமை ஓடுகின்றது. பேரிரைச்சலுடன் உள்ள அந்த வடவாமுகாக்கினி ஆசியாக் கண்டத்துடன் மாத்திரம் நிற்கப்போவதில்லை. எங்கே நிறத்திமிரும் அத்திமிரால் ஏற்பட்டுள்ள கொடுமையும் உண்டோ, எங்கே முதலாளித்துவ அக்கிரமங்களும் அவற்றின் பயனாகவுள்ள கொடுமைகளும் உண்டோ, அங்கேயெல்லாம் இந்த ஊழிக்கால அக்கினி வரப்போகிறது. நிறத்திமிரை, முதலாளித்துவ அகந்தையை இது தக்கப்போகிறது.

"இன்று இந்த அமெரிக்காவிலே நாம் நீக்கிரோவர்களை மிகவும் கொடுமையாக நடாத்துகிறோம். தொழிலாளி நெற்றி வியர்வை சிந்தப் பாடுபட்டுத் தரும் உழைப்பைத் தின்று ஏப்பமிடுகிறோம். அப்படியான ஓர் நிலைமையில் எமக்கிடையே எவ்வாறு சாந்தமும் சமாதானமும் ஏற்படும். ஆசிய நாட்டிலிருந்து அகோர முகத்துடன், கோர சத்தத்துடன் வரும் ஊழிக்கனலை நாம்தடுக்க, இச்சந்தர்ப்பத்தில் எமக்கு ஆற்றலுண்டா?"

# கடலேரித் திட்டம்

## நிறைவேற்றத் தீர்மானம்

வடமராட்சிக் கடலேரியை நல்ல நீர்நிலையமாக்கும் திட்டம் ஒன்றை விவசாயப்பகுதி நிருவாகசபை அங்கீகரித்துவிட்டது. இத் திட்டத்தின் பயனாக வடமராட்சிக்குப் பெரும் நன்மைகள் விளையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது இப்பகுதியில் 15000 ஏக்கர் நிலம் தரிசுபற்றிக் கிடக்கின்றது. இத்திட்டத்தின் பயனாகக் குறைந்தபட்சம் 8500 ஏக்கர் நிலமாவது விவசாயத்துக்கு உபயோகப்படுத்தப்படலாம் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டம் முழுவதையும் செய்து முடிக்க 11 லட்சம் ரூபா செலவாகும். இதில் இப்போதைக்கு 1½ லட்சம் ரூபாவுடன் வேலையை ஆரம்பித்து வைப்பதென முடிவுசெய்யப்பட்டிருக்கிறது முழுவேலையும் பூர்த்தியாக்கப் பலவருஷங்கள் பிடிக்குமாம்.

இப்போது உப்புநீர் தேங்கியுள்ள ஏரியை, சுத்தஜல ஏரியாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம். கடல் தண்ணீர் இந்த ஏரிக்குள் வராமல் இருப்பதற்காக அணைகள் கட்ட 6 லட்சம் ரூபா செலவு பிடிக்கும்.

# கரையூர்த் திட்டம்

## அரசாங்கசபையில் நிறைவேறியது

யாழ்ப்பாணம் கரையூர்ச்சேரி ஒழிப்புத்திட்டத்துக்கு 2,266,800 ரூபா வேண்டும் என்று ஸ்தலஸ்தாபன மந்திரி சென்ற செவ்வாய்க்கிழமை அரசாங்கசபையில் எடுத்தாண்ட உபமான்யப் பிரேரணை நிறைவேறிவிட்டது, மிஸ்ரர் பண்டாரநாயக்காவுக்குப் பதிலாக இந்தப் பிரேரணையை மிஸ்ரர் சேனநாயக்கா எடுத்தாண்டபோதுபின்வருமாறுகூறினர்:

"இவ்விஷயத்தில் வடபகுதிப் பிரதிநிதிகள் அனைவரும் ஒருமித்தமனத்தினராய் இருப்பதையிட்டு நான் உண்மையில் சந்தோஷமடைகிறேன். இவ்விஷயத்தில் நான் சொல்லக்கூடியது ஒன்றுண்டு. தென் இலங்கையில் உள்ளநாங்கள் வடபகுதிக்காக ஏதும்செய்ய முயற்சிக்கையில் அதற்குப் பல தடைகள் இடப்படுகின்றன. சிலர், பகிரங்கத்தில் ஒன்று கூறி, இரகசியத்தில் வேறு ஒன்று கூறி மக்களை ஏமாற்றுகிறார்கள். நாட்டின் நன்மையின் பொருட்டு இப்படியான செயல்கள் இனியாவது ஒழிக்கப்படுமாக."

ஸ்ரீமகாதேவா இவ்விஷயத்தை மந்திரசபையினர் செய்ததையிட்டுப் பாராட்டிப் பேசினர். சிங்கள மந்திரிகள் யாழ்ப்பாணத்துக்கு ஒன்றும் செய்யவில்லை: செய்யவும் மாட்டார்கள்; அப்படிச் செய்வதென்று கூறினால் அது வெறும் பகட்டுரை என்று ஓர் சிலர் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். அவர்கள் கூற்றுக்குத் தக்க பதிலாகும் இது என்று ஸ்ரீ மகாதேவா குறிப்பிட்டு, இந்தக் கைங்கரியத்தில் உழைத்த யாழ்ப்பாண நகர சங்கத் தலைவர் ஸ்ரீ க பொன்னம்பலத்துக்குத் தம் நன்றியைத் தெரிவித்தார். ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலமும்இதனை ஆதரித்துப் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞூ
மாசிமீ ௧௩-௨ செவ்வாய்க்கிழமை.

## கட்டுப்பாடுகள் ஒழிக

"மழைவிட்டுந்தூவானம் ஒழியவில்லை" யென்றவாறு, உலக இரண்டாம் யுத்தம் முடிந்து சமாதானமும் உண்டாகி வருடக் கணக்கிற் காலஞ் சென்றும் இன்னமும் அந்த யுத்தகாலத்திலே விதிக்கப்பட்டதாகிய உணவுப்பொருள், உடைப் பொருள் முதலாம் மானுட வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்கள் மீது இந்நாட்டில் அதிகாரிகளினால், விதிக்கப்பட்ட கட்டுப்பாடு இற்றைவரையில் ஒழிக்கப்படாமலே இருக்கின்றது; இக்கட்டுப்பாடுகளை அதிகாரிகள் இவ்வாறு தவிர்க்க மறந்திருப்பதனால் இங்குள்ள மக்களுக்கு நேர்ந்துவரும் இன்னலும் கவலையும் அதிகமாகும்; சில பொருள்களில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு காலஞ்செல்ல நெகிழ்வதின்றி, அதற்கு நேர்மாறாக இறுகி வருகிறதெனச் சொல்லலாம்; இதற்கு உதாரணமாகக் கூறத்தக்கது கடதாசி விஷயத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடாகும். இக்கடதாசிக் கட்டுப்பாடு முன்னரைக்காட்டிலும் இப்பொழுது மேலும் மேலும் இறுக்கப்பட்டு வருவதற்கு அந்தரங்க ஏதுக்கள் சிலஉண்டெனச் சொல்லப்படுகின்றது; அவ் வேதுக்களை இங்கே எடுத்துக் காட்டுதல் மிகையாகும்.

இலங்கை மக்களின் நித்திய வாழ்க்கைச் செலவு சிலகாலமாக அதிகரித்து வருகிறதென்பதை யுத்தேசித்து, அதிகாரிகள் இலங்கை அரசினரின் பொக்கிஷப் பகுதியிலுள்ள உத்தியோகத்தர்களை, அவ்விஷயமாக ஆராய்ந்து காரணத்தைக் கண்டு, வாழ்க்கைச் செலவைக் குறைத்தற்காகிய வழி வகைகளைத் தமக்குத் தெரிவிக்கும்படி கற்பித்துள்ளார்களாம்; குறித்த அரசாங்க பொக்கிஷப் பகுதி உத்தியோகத்தர் இவ் விஷயமாக இப்பொழுது ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டிருக்கின்றனரெனவும், இவர்கள் செய்யும் ஆராய்ச்சியின் விளைவாகிய அறிக்கை, அடுக்க நிகழவிருக்கும் இலங்கை மந்திரிமார் சபையிற் சமர்ப்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படலாயிற்று. பொக்கிஷப்பகுதி உத்தியோகத்தர் இவ்விஷயமாகத் தங்களுட் கலந்து யோசித்தவிடத்து, தாம் காட்டும் இரண்டு பிரேரணையுள் ஒன்றினைச் செய்யில் இலங்கை மக்களின் நித்திய வாழ்க்கைச் செலவு குறைதல் இயலுமென அபிப்பிராயப் படுகிறார்களாம்; அவற்றுள் ஒன்று, பொருள் பண்டங்களுள் இப்பொழுது விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் முழுவதையும் அறவே யொழித்துவிட்டுப் பழையபடி ஊரவர்கள் பொறுப்பில் இப் பொருள் பண்டங்களையிட்ட வியாபாரத்தை விடுதலாம்; இப்படிச் செய்யின் உடனுக்குடன் பொருள் பண்டங்களின் விலை அதிகம் ஏறிவிடுமென மேற்படி பொக்கிஷப்பகுதி உத்தியோகஸ்தர் அஞ்சுகின்றனராம். இவர்கள் சொல்லும் அடுத்த உபாயம் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களின் இறக்குமதிப் பொறுப்பை அரசினரே ஏற்று நடத்துதலென்பதாம்; ஆனால் இப்பொறுப்பைவகிப்பின் அரசினர் செலவு அதிகப்படுமெனவும், மேற்படி உத்தியோகத்தர்களே பயப்படுகின்றனர்;

நோயைச் சொன்னால், இல்லையேல் நோய் இன்னதென உணர்ந்து கொண்டால், வைத்தியராயுள்ளவர் அந்நோயை நீக்குவதற்கு, தக்கமருந்து கொடுப்பதே முறையாகும். அதனை விடுத்து இந்த நோய்க்கு இந்த மருந்தைக் கொடுத்தால் அடுத்தொரு நோய் காணும் என்று திறமையற்ற வைத்தியர் யாரேனுங் காரணங் கொட்டுவதுபோல், எங்கள் அரசாங்க பொக்கிஷப்பகுதி உத்தியோகத்தர் தங்களுட் கலந்து விவாதிக்கும் தடையேதுக்கள், இவ் வுத்தியோகத்தர்கள் இப்படியான விஷயங்களை எடுத்து ஆராய்ந்து ஆகவேண்டிய வழிவகைகளைக் காட்டுதற்கு ஆற்றலற்றவரென்பதைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன. ஐக்கிய சங்கக் கடைகள் ஆரம்பத்தில், இங்குள்ள மக்களுக்கெல்லாம், அவர்கள் பொருள்பண்டங்கள் விஷயமாக அதிக கஷ்டமுறாவண்ணம் பொருள்களை முறையே பகிர்ந்து விநியோகஞ் செய்து வந்தன; ஆனால் காலகதியிற் பல சங்கக்கடைகள் ஏழை மக்களின் கஷ்டத்திற்கும் சோர வியாபாரத்திற்கும் ஏதுக்களாக மாறிவிட்டனவெனலாம்.

ஐக்கிய ராச்சியத்தினர்க்கும் யப்பானியர்க்குமிடையே நடந்த யுத்தத்தில் யுத்தகளமாக விருந்ததும் சிலவருடம் யப்பானியர் கைப்பட்டிருந்ததுமாகிய சிங்கப்பூரிலே விதிக்கப்பட்டிருந்த உணவு உடை முதலாம்பொருள்களின் கட்டுப்பாடுகளெல்லாம் அறவே தவிர்க்கப்பட, அவையொன்றும் நேராததாகிய இலங்கையிலே இன்னமும் கட்டுப்பாடுகள் தவிர்க்கப்படாதிருத்தல் விபரீதமாகும். இதற்குக் காரணம் இவ்விலங்கையின் பரிபாலகர் இவ்விஷயமாகக்கொண்டுள்ள அலட்சியமாகும்; மேலும் கட்டுப்பாடு சம்பந்தமான ஸ்தானங்களிற் பல்லாயிரக் கணக்கானோர் ஆண்களும் பெண்களும் சமயோசிதமாகக் கடமை பார்த்துக் "கொழுத்த" வேதனம் பெற்று வருகிறார்களென்றும், கட்டுப்பாடுகள் ஒழிக்கப்படும்போது இவர்களுட் பெரும்பாலார் வேறு எவ்வகையான பிழைப்புமின்றிச் சங்கடப்பட நேருமென்றும், இதனாற் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள அதிகாரிகள் இக்கட்டுப்பாட்டினைத் தவிர்க்கும் விஷயத்தை வெறுக்கிறார்களென்றும் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

சிங்கப்பூரிலே கட்டுப்பாடுகளெல்லாம் தவிர்க்கப்பட்டபோது, பொருள் பண்டங்களின் விலைகள் உடனுக்குடன் இருமடங்கு மும்மடங்காக ஏறியவென்பது நிசம்; ஆனால், யுத்தகாலத்திற்கு முந்திய நிலைமைக்குப் பொருள்விலை மீண்டு இறங்கா விட்டாலும், காலகதியிற் பொருள்களின் விலை சிங்கப்பூரிலே குறைந்து வரலாயினவெனத் தெரிவிக்கப் படுகின்றது. பொருட் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கட்கு வேதனமாக இலட்சக் கணக்கான ரூபா மாசந்தோறும் அரசிறையிலிருந்து கொடுக்கப்படுகிறதெனக் காணக் கிடக்கின்றது; தொன்மைபோல் வியாபாரிமார் பொறுப்பில் பொருள்பண்டங்களின் வியாபாரத்தை விட்டுவிட்டால் மேலே சொல்லப்பட்ட வேதனத்தினால் வருஞ்செலவுப் பணம் எஞ்சுவதோடு, கனவிலும் வியாபாரமறியாதவர்களாகிய அரசாங்க உத்தியோகத்தர்களும் "கிளார்க்"மாரும் தங்களுக்கு அந்நியமாகிய வியாபாரத் தொழிலை நடத்துவதினால் ஏற்பட்டுள்ள பொருள் நஷ்டமும் இல்லாதொழியும்; அரசாங்க உத்தியோகத்தரானோர் வியாபாரிகள் செய்துவந்த வாணிகத்தை நடத்தத் துணிந்த செயல், நாய் பார்க்கவேண்டிய கடமையைக் கழுதை பார்க்கத் தலைப்பட்டவாறு அநர்த்தமாகவே முடியலாயிற்றெனலாம். ஆனதால் இவைகளையெல்லாம் உத்தேசித்து எங்கள் அரசாங்கசபையார் புதிய பாராளுமன்றம் வருவதற்கு முந்தி, சனங்களால் இன்னமுஞ் சகித்தற்கரியனவாகிய பொருட்கட்டுப்பாடு விலைக் கட்டுப்பாடென்னுமிவைகளை ஒழித்துவிடுதல் பெருநன்மையாகும்.

# சைவபரிபாலனசபை ஆச்சிரம நிதி

## பணம் உதவியோர் விபரம்

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| ஸ்ரீமான்கள் | முன் கணக்குப்படி | | 1150 | 00 |
| S. K. செந்திநாதன், கண்டி | .... | .... | 10 | 00 |
| V. சிவப்பிரகாசம் , | .... | .... | 10 | 00 |
| G. G. பொன்னம்பலம், 3-ம், 4-ம் பகுதிகள் | | .... | 200 | 00 |
| முகாந்திரம், S. குமாரசுவாமி, மட்டக்களப்பு | | ... | 100 | 00 |
| R. C. சுப்பிரமணியம், கோக்குவில் | | .... | 10 | 00 |
| E. ஐயம்பிள்ளை, தலையாளி | .... | .... | 10 | 90 |
| K. முருகேசு, கந்தர்மடம் | .... | ... | 75 | 00 |
| P. செல்வத்துரை, | ... | .... | 10 | 00 |
| V. நவரத்தினம், ஐயனார் கோவிலடி | | ... | 10 | 00 |
| M. பொன்னம்பலம் கச்சேரி | .... | ... | 10 | 00 |
| Dr. K. இராசா, வணகிழக்கு | .... | ... | 20 | 00 |
| S. பொன்னம்பலம், இமதுவை | .... | ... | 10 | 00 |
| மு. செல்வத்துரை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | | .... | 10 | 00 |
| | | | 1635 | 00 |

17-2.47

தி. இராசநாயகம்
தனதிகாரி.

# பிரித்தாளும்சூழ்ச்சி

## ஐரிஷ் பிரமுகரின் கூற்று

ஐயர்லாந்துக்குச் சுயராச்சியம் வழங்கும்போது, அந்நாட்டை இரு துண்டாக்கிவிட்டு, பிரிட்டிஷார் அநர்த்தம் புரிந்தனர். அந்த முறையை இந்தியா விஷயத்திலும் அநுட்டிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று பிரபல ஐரிஷ் தலைவராகிய மிஸ்ரர் மக்முலோஷ் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அவர் இவ்விஷயமாகக் கூறுவதாவது:

ஏகாதிபத்தியவாதிகளாகிய பிரிட்டிஷார், எப்போதாவது தாமாகச் சுயராஜ்யத்தைக் கொடுத்தது இல்லை. அந்த நல்ல சுபாவம் அவர்களுக்குக் கிடைக்காது. ஆனால், இனிப் பொறுக்கமுடியாது என்று கண்டவுடனேயே பிரிட்டிஷ் இராஜதந்திரிகள். தம் அடிமைநாட்டை அப்படியே போட்டுவிட்டு ஓடுவர். ஆனால் போகும்போது சும்மாவும் போகமாட்டார். தங்கள் செல்வாக்கை அங்கே அதிகரிப்பதற்காக எங்கே சிறுபான்மையினர் பிரச்சினை இருக்கிறது என்று துருவிப்பார்த்து, அந்தச் சிறுபான்மையினரைத் தட்டிக் கொடுப்பர். அந்த வேலையைத்தான் அவர்கள் எங்கள் ஐயர்லாந்திற் செய்தனர்.

ஆனால் அதே கிருத்திரமத்தை இந்தியாவிலும் செய்ய, உலகம் விடக்கூடாது."

# நேரு வரவேற்கிறார்

## "சவாலை ஏற்கத் தயார்"

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிக்கையைப் பண்டிதர்நேரு மனப்பூர்வமாக வரவேற்கிறார்.

பிரிட்டிஷார் 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கு முன் புறப்பட்டு விடுவர் என்ற உத்தரவாதம், அவர்கள்பால் எமக்கிருந்த சந்தேகத்தை நீக்கிவிடுவதாகும். "இனி, நாங்கள் எமக்குள்ளே ஓர் ஒழுங்குக்கு வரவேண்டும், இனி இந்தியாவிலே, எமக்கிடையே உள்ள உண்மைநிலையை உணரவேண்டும். எங்கள் பிரச்சினைகளை நாமே பேசித் தீர்க்க ஓர் சந்தர்ப்பம் வந்திருக்கிறது" என்று நேருஜி கூறினார்.

"நாங்கள் போகிறோம், இனி நீங்கள் உங்கள் விஷயங்களைப் பாருங்கள் என்று பிரிட்டிஷார் கூறுவது இந்திய மக்களுக்கு ஓர் சவால் விடுப்பதாகும். இந்தச் சவாலை நாம் ஏற்க வேண்டும். ஏற்கத்தயார். அஞ்சாமையுடனும் நேர்மையுடனும் பரஸ்பரம் நல்லெண்ணத்துடனும் நாம் எம் சொந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்போமாக" என்று நேரு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முடிவு!

## பாரத அரங்கத்தின் அடுத்த அங்கம்

### அட்லியின் வழவழாப் பேச்சு

**முட்டைகட்டுவர்**

இந்திய அரசியல் நிலைமை சம்பந்தமான நெருக்கடியையிட்டுப் பிரிட்டிஷ் பிரதமர் சென்றவாரம் ஓர் அறிக்கையை விடுத்திருக்கிறார். அதன் படிக்கு:

(அ) 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்துக்குமுன் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு நீங்கிவிடுவர்.

(ஆ) இதற்கிடையில் இந்தியாவில் உள்ள சகல அரசியற் கட்சிகளும் தமக்கிடையே பூரண ஒற்றுமை கொண்டு தமக்கு வேண்டிய அரசியலை ஆக்கிக்கொள்ளல் வேண்டும்.

(இ) குறித்த காலவெல்லைக்குள் கட்சிகளுக்குள் ஒற்றுமை ஏற்படாவிட்டால், யாரிடம் அதிகாரத்தை ஒப்புவிப்பது என்பதுபற்றி அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் நிச்சயிக்கும். இப்போது அவ்விஷயமாக ஓர் முடிவும் கூறமுடியாது.

(ஈ) சுதேச சமஸ்தானங்கள் விஷயமாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இப்போதுள்ள அதிகாரம், பிரிட்டிஷார் வெளியேறியதும், வேறும் மூன்றும் கட்சிக்கு மாற்றப்படமாட்டாது. அந்த அதிகாரம் சமஸ்தானங்களையே அடையும். சுதேச சமஸ்தானங்களை எதிர்கால இந்திய அரசியல் விஷயமாகக் கட்டுப்படுத்த பிரிட்டிஷ் அரசாங்கம் தயாராக இல்லை,

(உ) இப்போது இராஜப்பிரதிநிதியாயுள்ள வேவல் பிரபு பதவியினின்றும் நீக்கப்படுவர். அவர் இடத்துக்கு தென்கிழக்கு ஆசியபீடத்தில், யுத்த காலத்தளபதியாயிருந்த மவுன்ற்பேற்றன் பிரபு இராஜப் பிரதிநிதியாக மார்ச் மாதத்துடன் நியமிக்கப்படுவர். மவுன்ற்பேற்றன் பிரபு 1948 ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கிடையில் இந்திய நிர்வாகத்தைத் திறம்பட நடாத்த முயற்சிப்பர். கட்சிகட்கிடையே ஒற்றுமையுண்டாக்கி நிர்வாகத்தை இந்தியர் கைக்கு இடையூறு இன்றி மாற்ற வழிவகைகளை ஆக்க முயற்சிப்பர். இவைதான் பிரிட்டிஷ் பிரதமர் பாராளுமன்றத்திற் சமர்ப்பித்த அறிக்கையின் சாரம்.

**ஓலம்போடுகிறார்கள்!**

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிக்கையைப்பற்றி அதனாற் பாதிக்கப்பட்டுள்ள இந்திய மக்களின் அபிப்பிராயம் தெளிவாக முன்னர், பிரிட்டிஷ் பிற்போக்காளர் ஓலம்போடத் தொடங்கிவிட்டனர். இவ்வளவு சீக்கிரத்தில் இந்தியாவை விட்டு நாம் நீங்கிவிடலாகுமா? நாம் இப்படி நீங்கிவிட்டால், ஹிந்துக்களும், முஸல்மான்களும் ஒருவரையொருவர் விழுங்கிவிட மாட்டார்களா? என்றெல்லாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். சேர்ச்சில் கும்பல் இவ்விஷயத்தில் பெரும் கும்மாளம் போடுகின்றன. கூடிய சீக்கிரம் பாராளுமன்றத்தில் அட்லி அரசாங்கத்துக்கு விரோதமாக ஓர் கண்டனத் தீர்மானத்தையும் அக்கும்பல் எடுத்தாளப்போவதாகத் தெரிகிறது.

**பல பிரச்சினைகள்**

வேவலை நீக்கியதன் காரணம் என்ன? வேவல் சாதிக்கமுடியாத விஷயங்களை மவுன்றபேற்றன் பிரபு சாதித்து விடுவாரா? காங்கிரசுக்கும் முஸ்லிம்லீக்கிற்குமிடையே இதுவரை வாராத ஒற்றுமை இனி வந்துவிடுமா? அப்படி வராவிட்டால் அதிகாரத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் யாருடைய கையிற் கொடுக்கும்? சுதேச சமஸ்தானங்களுடைய நிலைமை என்ன? என்ற இப்படியான பல பிரச்சினைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெள்ளையறிக்கை இப்போது கிளப்பியுள்ளது.

**வேவல் நகிடுநத்தம்**

இன்று இந்திய இடைக்கால அரசாங்கததில்நிகழும் விபரீதங்களுக்கு மூலகாரணர் வேவல்துரைதான் என்பதை இந்திய அரசியல் விஷயங்களை அவதானிப்போர் யாவரும் அறிவர். லீக்கர் அரசியல் நிர்மாணசபையிற் சேர்ந்துஒத்துழைப்பர்; நேருவும் அவருடையசகாக்களும் ஏற்படுத்தியசம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பரென்று நேருவுக்கும் காங்கிரசுக்கும் கூறி லீக்கரை இடைக்கால அரசாங்கத்திற் சேரச்செய்து, அங்கே பிளவு வளரவிடுத்து வழக்கமான பிரித்தாளும் தந்திரத்தைக் கடைப்பிடித்தவர் சாட்சாத் வேவல்துரை. இதனைநேரு பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குக் கண்டிப்பாக அறிவித்திருக்கிறார். வேவலின் மனோபாவம் மாறி ஜனநாயக சம்பிரதாயப்படி இடைக்கால அரசாங்கத்தை நடாத்தவேண்டும், இல்லையேல் லீக்கர் வெளியேறவேண்டும். இந்த நிபந்தனையைப் பிரிட்டிஷார் பூர்த்திசெய்யாவிட்டால் நேருவும் அவர் சகாக்களும் வெளியேறத் தயாராக இருந்தனர் வேவல்துரை லீக்கரை அகற்ற விரும்பவில்லை. எனவே, அவர் பதவியினின்றும் அகன்றார்.

**இனி நடப்பது என்ன?**

பிரிட்டிஷார் வெளியே போய்விடுவதாக நாளும் குறித்துவிட்டனர். இனி அவர்களுடைய வாக்கில் சந்தேகம் கொள்ளக் காரணமில்லை. ஆனால் இந்த 14 மாத காலத்துக்குள்ளும் இந்தியக் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டுவிடுமா? மூன்றும் பேர்வழி இருப்பதனால்தான் எமக்கிடையே ஒற்றுமையில்லை என்று இந்தியத் தலைவர்கள் இதுவரை கூறி வந்தனர். இனி இந்த நியாயம் கூற முடியாது. சகல கட்சிகளும்—விசேஷமாக காங்கிரஸ முஸ்லிம்லீக், சீக்கியர் என்னும் முச்சாராரும்ஒற்றுமை பூணவேண்டும். இதுவரை தம்மைத் தட்டிக்கொடுத்த பிரிட்டிஷார் இனி உதவிக்கு வரார் என்பதை உணர்ந்தவுடன் லீக்கர் சமரசத்துக்கு வரவும் கூடும். அல்லது இன்னும் விடாப்பிடியாக நின்று பாகிஸ்தான்தான் வேண்டும் என்று பிடிவாதம் சாதித்தால் தம் காரியத்தைப் பெறலாம் என லீக்கரும் ஜின்னாவும் நினைத்துக் கருமம் ஆற்றித் தம் பாகிஸ்தான் கிளர்ச்சியை இன்னும் பலமாக்கலாம்.

**மீண்டும் வழ்வழா நியாயம்தான்**

பிரிட்டிஷார் 1948—ம் ஆண்டு ஜூன் மாதத்துடன் வெளியேறிவிடுவது என்பதில் மாத்திரம் பிரிட்டிஷ் பிரதமர் தெளிவாகக் கூறினார். மற்றைய அம்சங்களில் எல்லாம் வழவழா நியாயங்கள்தான் தேங்கியிருக்கின்றன. நாம் அதிகாரத்தை மாற்றும்போது சிறுபான்மையினருடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாக அவர்கள் மீது ஓர் வேண்டாத அரசியலைத் திணிக்கமாட்டோம் என்று கூறுகிற அவர், அதே மூச்சில், சிறுபான்மையினர் பெரும்பான்மையினருடைய அரசியல் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கவும் சம்மதியேம் என்கிறார். ஆகவே இந்த அறிக்கையினால் உண்மையில் எதுவும்தெளிவாகவில்லை. இப்போது இந்திய மக்கள் செய்யக்கூடியது ஒன்றேயொன்றுதான். அனைவரும் பூரணஒற்றுமை கொண்டு ஓர் அரசியலை அமைப்பதுவே அது.

**ஜின்னா மவுனம்**

பிரிட்டிஷாரின் வெள்ளையறிக்கையைப்பற்றிக் காங்கிரசும் முஸ்லிம்லீக்கும் இன்னும் உத்தியோக பூர்வமான அபிப்பிராயம் எதுவும் கூறவில்லை இந்த இரண்டு ஸ்தாபனங்களின்காரியசபைகள் இன்னும் இரண்டொரு தினங்களிற் கூடும். அதன் பின்புதான் நிலைமைதெளிவாகும் இதற்கிடையில் ஜின்னா தாம் இன்னும் அந்த அறிக்கையைப் பூரணமாகப் படிக்கவில்லையென்றும்: ஆகவே இவ்விஷயமாகத் தாம் ஓர்விதஅபிப்பிராயமும் கூறமுடியாதென்றும் ஓர்செய்திஸ்தாபன நிருபர்க்குக் கூறினார். பிரிட்டிஷார் வெளியேறத் தீர்மானித்திருப்பதையிட்டுக் காங்கிரஸ் வட்டாரங்கள் சந்தோஷம் தெரிவிக்கின்றன.

**புதிய இராஜப் பிரதிநிதி**

இதற்கிடையில், மவுன்ற்பேற்றன் பிரபு லண்டனில் உள்ள இந்தியக் காரியாலயத்தில் மிகவும் ஜரூராக விஷயங்களைப் படித்து வருகிறாராம். மார்ச்மாதத்தில் இந்தியாவுக்குவந்து பதவியை ஏற்றதும், இப்போதுள்ள இடைக்கால அரசாங்கத்தை ஜனநாயக மந்திரசபைபோல உபயோகித்து, ஓர் சுயராஜ்ய நாட்டின் மந்திரசபையென ஆக்குவார் என்றும், ஜனநாயக ஆட்சியில் நிலவும் சம்பிரதாயங்களையே கைக்கொள்ளவர் என்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது; அவர் இந்த 16 மாத காலத்துக்குள், முஸ்லிம் லீக்கிற்கும், காங்கிரசுக்குமிடையே உண்மையான ஓர் சமரசத்தை ஏற்படுத்திவைப்பார் என்று யூகிக்கப்படுகிறது.

---

# பேச்சு ஒன்று செயல் ஒன்று!

## டக்ரர் விக்கிரமசிங்ஹ கண்டனம்

இலங்கைச் சமதர்மக்கட்சித் தலைவராகியடக்ரர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹ மொரவாக்கைப்பகுதிக்குப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இந்த அறிக்கையில் இன்று இலங்கையின் நிலைமைபற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

"குடியேற்றநாடுகளுக்குச் சுதந்திரம் கொடுப்பதாகப் பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் கூறுகிறது. ஆனால் எங்கள் இலங்கையிலே இந்த அரசாங்கம் உண்மையிற் செய்து வருவதென்ன? ஏகாதிபத்திய கடற்படை, விமானப்படை என்பவற்றுக்குரிய தளங்களை விஸ்தரித்துக்கொண்டு வருகிறது, இலங்கை மக்களின் அடிமைத்தனத்தைத் தன் சொந்த நன்மைக்காகப் பயன்படுத்திக்கொண்டு, இலங்கையின் பிரதான விளைபொருள்களின் விலையையும் அவற்றின் உற்பத்தியையும் குறைத்து வருகிறது. எங்களுச்கு வர்த்தக உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது, இவற்றின் காரணமாக 1929—1933-ம் ஆண்டுகளில இருந்ததைவிட இலங்கை இப்போது மிகவும் கேவலமான பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கிறது. பேச்சு ஒன்று செயல் ஒன்றாக இருக்கும் பிரிட்டிஷ் தொழிற்கட்சியரசாங்கத்தின் போக்கை, லண்டனில் நிகழவிருக்கும் சமதர்மிகள் மகாநாட்டின் மூலமாக உலகமக்களுக்கு நாம் எடுத்துக்காட்டப்போகிறோம்.

"இலங்கையிலே பிரிட்டிஷார் இன்று என்ன செய்கிறார்கள்? தேவையற்ற ஆடம்பரமான பொருள்களைக் கொண்டுவந்து குவித்திருக்கிறார்கள், இவை எமக்கு வேண்டியதில்லை, இவற்றுக்குப்பதிலாக கைத்தொழில் விவசாய யந்திரசாதனங்களை உதவ வேண்டியது அவசியம்."

---

# "சாத்தான் சேட்டை"

## ருஷிய சமதர்மிகள் செயல்

இன்று ஸ்பெயின் இராச்சியத்துச் சர்வாதிகாரி சேனாதிபதி பிராங்கோவைக் கலைத்து, அங்கே புதிய ஓர் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று உலக வல்லரசுகளிற் பல விரும்புகின்றன, பிராங்கோ, ஹிட்லர், முஸோலினி என்னும் சர்வாதிகாரிகளின் கைப்பொம்மையாய் இருந்தவர். அவர்களுடைய உதவியினாலேயே ஸ்பெயினில் குடியரசு அரசாங்கத்தைக் கலைத்து அதிகாரத்துக்கு வந்தவர் என்றெல்லாம் இந்த வல்லரசுகள் கூறுகின்றன. அந்த ஸ்பெயினுக்கு விரோதமாக இவை பல கருமங்களையும் ஆற்றிவருகின்றன.

இப்படியாக ஸ்பெயினுக்கு விரோதமாகச் செய்யும் கருமங்களுக்குத் தலைமை தாங்கியுள்ளது ருஷியா.

ருஷியாவின் செயலைக் கண்டித்து, பிராங்கோவை ஆதரித்து ஐயர்லாந்தில் 86 வயதான டக்ரர் மைக்கேல் பெக்கார்டி என்னும் மேற்றிராணியார் இப்போது ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அந்தஅறிக்கையில் அவர் கூறுவதாவது:

'10 ஆண்டுகளுக்கு முன் ஸ்பெயினிலே ருஷியா சாத்தான் சேட்டை புரிந்து அங்கே உள்நாட்டுக் கலகத்தினை உண்டாக்கி, பயங்கரமான ஆபத்துக்களை விளைத்தது. இப்போதும் இந்தச் சாத்தான்சேட்டைகளினின்றும் ஸ்பெயின் தப்பவேண்டுமானால், உலகத்திலே, மதம், நாகரிகம், சீர்திருத்தம் என்பன நிலைத்திருக்க வேண்டுமானால், அந்த ருஷியச் சதிகாரர்க்கு விரோதமாக நின்று சமர் தொடுத்து அவர் சதியாலோசனைகளை வெட்டியெறியக்கூடிய வீரபுருஷனான பிராங்கோவை உலகமக்கள் ஆதரிக்கவேண்டும். இன்று சமதர்மிகள் என்னும் நாஸ்திகர் அஞ்சுவது பிராங்கோ ஒருவர்க்குத்தான்."

## ஸ்வீடனுக்கு இலங்கைச் சாராயம்

ஸ்வீடனில் உள்ள ஓர் வர்த்தக சமுதாயம், 1 லட்சம் கலன் இலங்கைச்சாராயம் தரமுடியுமோ என்று இலங்கை யரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. இதன் பயனாகக் கூடிய சீக்கிரத்தில் அந்நாட்டுக்குப் பெருந்தொகைச் சாராயம் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுமாம்.

---

ஒரு பிரசவத்தில் மூன்று பிள்ளைகள் பிறந்தால் அப்பிள்ளைகள்வளர்வதில் இலங்கை அரசாங்கம் உதவிசெய்ய நிச்சயித்திருக்கிறது. பிரசவமான முதலாம் மாதத்தின்பின், அப்பிள்ளைகளின் தாய்க்கு 00 ரூபா உதவப்படுமாம். அதன் பின் ஒருவருஷ காலத்துக்கு அத்தாய்க்கு மாதந்தோறும் 25 ரூபா உதவப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ரேடியோ

## அதன் எதிர்காலம்

( ஸ்ரீ க. கனகரத்தினம் )

இலங்கையின் ஒரேயொரு ரேடியோ நிலையமாகக் கொழும்பில் உள்ள ஸ்தாபனத்திலிருந்து வெளிவரும் நிகழ்ச்சிகள் சாரமற்றவை என்ற முறைப்பாட்டுக்கிணங்க. அரசாங்கம், இந்நிலையத்தைப் புனருத்தாரணம் செய்ய முன்வந்திருக்கிறது. தமிழ் நிகழ்ச்சிகள் விஷயமாக, ஓர் ஆலோசனைச் சபையையும் நியமித்திருக்கிறது. இச்சபைக்கு கணக்குப் பரிசோதனை அதிகாரியாயிருந்த ஸ்ரீ க. கனகரத்தினம் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ரேடியோத் தமிழ் நிகழ்ச்சிகளை எவ்வாறு, ரசிகர்களுக்கேற்ற முறையில் அமைக்கலாம என்பதுபற்றி ஸ்ரீ கனகரத்தினம் தாம் செய்யும் முயற்சிகளை இந்த ரேடியோப் பேச்சின்மூலம் விளக்குகிறார்.

முற்றொடர்

இறுதியாக, தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்கும் நேயர்களாகிய உங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். அவற்றிற்கு உங்கள் பதில்களை எழுதி, தமிழ் நிகழ்ச்சி நிர்வாகத் தலைவர், ரேடியோ நிலையம் கொழும்பு என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன். அந்தக் கேள்விகள் பின்வருமாறு:—

1 கொழும்பு ரேடியோத் தமிழ் நிகழ்ச்சிகளைப்பற்றிய உங்கள் அபிப்பிராயமென்ன? பொதுவாக, இவற்றில் என்ன புதிய மாற்றங்கள் செய்யப்படலாமென்று கருதுகிறீர்கள்?

2 சங்கீதக் கச்சேரிகள் இப்போது ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் நேரங்கள் உங்களுக்குத் திருப்தியாயிருக்கின்றனவா?

இல்லாவிடில், வேறு எந்த நாட்களில், என்ன நேரங்களில் இவற்றை ஒழுங்கு செய்யலாமென்று கருதுகிறீர்கள்?

3 உங்களுக்கு மிகவும் பிடித்த வாய்ப்பாட்டுக்காரர் 6 பேரையும், வாத்தியங்கள் வாசிப்போர் 6 பேரையும் குறிப்பிட்டு எழுதுங்கள்.

இந்நிலையத்தில் ஒலிபரப்பப்படும் பேச்சுக்களைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன? என்ன விஷயங்களைப் பற்றிய பேச்சுக்களைக் கேட்க விரும்புகிறீர்கள்?

இலக்கியம், கலை, விஞ்ஞானம் சரித்திரம், பொருளாதாரம், சுகாதாரம், கைத்தொழில்கள், விவசாயம், கூட்டுறவியக்கம், சிறுகதை, பெண்களுக்கேற்ற விஷயங்கள், பொழுதுபோக்கான பேச்சுக்கள்: இவற்றில் எதை அதிகமாக விரும்புகிறீர்கள்?

5 ரேடியோ நாடகங்களையும் ஓற்றையங்க நாடகங்களையும் ஆதரிக்கிறீர்களா?

6 இப்போது நடத்தப்படும் புத்தி மண்டலம், விவேக சக்கரம், சிறுவர் பகுதி முதலிய நிகழ்ச்சிகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

இவற்றில் என்னென்ன திருத்தங்கள் செய்யப்படலாம் என்று கருதுகிறீர்கள்?

7 இசைத்தட்டு நிகழ்ச்சிகளில் இப்போது தெரிவு செய்யப்படும் இசைத்தட்டுகள் உங்களுக்குப் பிடித்தவைகளா?

இசைத்தட்டுகளில், கர்நாடக இசையையா அல்லது படப்பாட்டுகளையா நீங்கள் அதிகமாகச் சேர்க்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?

இசைத்தட்டுத் தொகுப்புக்களை ஆதரிக்கிறீர்களா?

8 தமிழ்ச்செய்தி யறிக்கை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? உள்ளூர்ச் செய்திகள், இந்தியச் செய்திகள், உலகச் செய்திகள் இவற்றில் எதை அதிகமாக விரும்புகிறீர்கள்?

இப்போது செய்தியறிக்கை ஒலிபரப்பப்படும் நேரம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? வேறு எந்த நேரங்களில் தமிழ்ச்செய்தி யறிக்கை கேட்க விரும்புகிறீர்கள்?

மேற் சொன்ன கேள்விகளுக்கு உங்கள் பதில்களை எழுதி, தமிழ் நிகழ்ச்சிகளில் என்ன திருத்தங்கள் செய்யலாமென்பதை எமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன், நிலையத்தில் சங்கீத நிகழ்ச்சிகளிலோ, நாடகங்களிலோ பங்கு பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் எல்லோருக்கும் உரிமையுண்டு; ஆகையால் நல்ல சாரீரமும், சங்கீத ஞானமும் உள்ளவர்களும், வாத்தியங்களில் திறமையாக வாசிக்கக்கூடியவர்களும், தேவார திருவாசகம் முதலிய தோத்திரப் பாடல்கள் பண் முறையில் பக்தியோடு பாடக்கூடியவர்களும் நிலையத்துக்குத் தெரியப்படுத்துங்கள். தகுதியுடையோரைப் பரிசோதித்து, நாங்கள் ஒலிபரப்பச் சேர்த்துக்கொள்ள விரும்புகிறோம்.

இன்னுமொரு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம்: இப்போது சங்கீதக் கச்சேரிகளுக்கும் பேச்சு நிகழ்ச்சிகளுக்கும் சன்மானம் முன்னரைவிட அதிகமாகக் கொடுக்கப்படுகின்றது. ஆகையால் முன்பு சன்மானம் போதாது என்ற காரணத்தால் நிகழ்ச்சிகளில் பங்கு எடுத்துக்கொள்ள முடியாமலிருந்தவர்கள் இப்போது சேரக்கூடிய வசதிகளுண்டு. இலங்கையில் தூர இடங்களிலிருந்து சங்கீதக்கச்சேரி செய்ய பிரயாணம் செய்ய வேண்டியவர்களுக்கு ரயில்வே வாரண்ட் இலவசமாகக் கொடுக்கவும் ஒழுங்கு செய்திருக்கிறோம். பெண்களுக்குத் துணையாக வரும் ஒருவருக்கும் அதிகமாக ஒரு வாரண்ட் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இத்தகைய புதிய வசதிகள் இருப்பதால் இன்னும் பலர் நிகழ்ச்சிகளில் பங்கு பெற இடமுண்டு.

இறுதியாக, நேயர்களாகிய உங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இருந்தால் தமிழ்நிகழ்ச்சிகளை எவ்வளவோ முன்னேற்றமடையச் செய்யலாம் என்பதைச் சொல்லி இப்பேச்சை முடிக்க விரும்புகிறேன்.


## விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பலாலிக் குறிச்சியிலிருக்கும் மாங்குளம் என்னும் குளத்திற்கு ஒரு கொங்கிறீற் றெகுலேற்றர் கட்டுவதற்கும், அணைக்கட்டுகளி லிருக்கும் திருத்தங்கள் செய்வதற்கும் வடமாகாணப் பகுதி ஏஜண்டு அவர்கள் 1947-ம் ஆண்டு பாகுனி மாசம் 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணிக்குள் குறித்த (ரெண்டர்) விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப்பத்திரம் ரூபா 50 கட்டி வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக் கொண்ட பத்திரங்களில் எழுதப்படல் வேண்டும். மறு விபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ம. ஸ்ரீகாந்தா

வடமாகாண ஏஜண்டு அவர்கட்காக

கச்சேரி, யாழ்ப்பாணம்

18—2—47.

G 149 25-2-47


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

புதன் பிப்பிரவரி 26

காலை 71-5 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி ஆர் கிருஷ்ணன் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 தஞ்சாவூர் ஜனகியம்மாள் பாட்டு 9 முடிவு.

1 சதுரப் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தஞ்சாவூர் ஜானகி அம்மாள் 2 தமிழில் செய்திகள் 2.05 தஞ்சாவூர் ஜானகி பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு ஆங்கிலப் பேச்சு 2-45 முடிவு.

மாலை 5: டி ஆர் கிருஷ்ணன் வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 என் எஸ் கிருஷ்ணன் கோஷ்டி 7-15 சித்ரகானம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி 8 தங்கத் தாயத்து நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஐரோப்பிய சங்கீதம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கிலச் செய்திகள் 10 இசைவேளை 10.3 முடிவு.

வியாழன் பிப்பிரவரி 27

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பாலக்காடு கே எஸ் ருக்மணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 வி ஸ்ரீனிவாசன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பாலக்காடு கே எஸ் ருக்மிணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 பாலக்காடு கே எஸ் ருக்மிணி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7 15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 சனைஸ்சர சர்வபங்கம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 கவி வேண்டிய பரிசு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 10-30 முடிவு.

செவ்வாய் பிப்பிரவரி 28

காலை: 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ராஜபாளையம் எஸ் எஸ் மணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 சி எல் சீதாராமன் பாட்டு 9 முடிவு,

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ராசபாளையம் எஸ் எஸ் மணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ராசபாளையம் எஸ் எஸ் மணி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

5 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 என் எஸ் ராஜண்ணையின் நாதஸ்வரம் 7.30 தமிழில்செய்திகள் 7-45 விவாத பிரச்சினைகள் 8 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 குரல் வகை இசைத்தட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கிலப்பேச்சு 10 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு,


## அகில இலங்கைத் தமிழர் மகாநாடு

1947-ம் ஆண்டு அங்கத்தவர் சந்தாப் பணமாகக் கொடுபடவேண்டிய 50 சதம், காங்கிரசின காரியாலயங்களில், அல்லது பகுதித்தனதிகாரியிடம்கொடுக்கப்படலாம்.

காரியாலயங்கள்

கொழும்பு: இ.194A தட்டாதெரு

யாழ்ப்பாணம் 'காங்கிரஸ்ஹவுஸ்' இ. 6 பெரியதெரு

தமிழர் மகாநாடு விதானங்கள் தனிப் பிரதி விலை சதம் 25; மகாநாட்டுக் காரியாலயங்களிற் பெறற்பாலன,

ஈ. எம். வி. நாகநாதன்

பொது இணைக்காரியதரிசி.

(M. 325, 25-2-47)


## தேகவியோகம்

தையனுயகியம்மை

''கவுண்டின்னிய' கோத்திரத்திற் பிறந்தவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உடுவிற் பதியிற பலதலைமுறையாக வாழ்ந்து வருகின்றவரும் கற்பொக்கணை வீரகத்திப்பிள்ளையார் கோவிலின் சொந்தக்காரருமாகிய பிரம்மஸ்ரீ தியாகராசக் குருக்கள் அவர்களின் தர்மபத்தினியும், உடுவில் தெற்குச் சைவ வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிவரும் சம்ஸ்கிருத தமிழ்ப் பண்டிதர் சுப்பிரமணிய ஐயர் உடுவில 'மான்'' ஆங்கில பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுபவராகிய பிரம்மஸ்ரீ வைத்யேசுவர ஐயர், ஸ்கந்தவரோதயக் கலாசாலையிற் சம்ஸ்கிருத தமிழ்ப் பண்டிதர் விஸ்வநாதக் குருக்கள், வண்ணார்பண்ணை கருணாகர பைரவ பகவதி மாரியம்மைகோவில் அர்ச்சகராகிய பண்டிதர் இரத்தினசபாபதிக் குருக்கள் என்னுமிவர்களின் தாயாருமாகிய சுமங்கலி தையனுயகி அம்மை சில காலமாகத் தம்மை வருத்திய நோய்காரணமாக இந்த மாசி மாதம் 5-ந் திகதி (17-2-47) திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் நாயகன், புத்திரர், புத்திரிகள், மருகர் மருகியர், பவுத்திரர் முதலியோர் புலம்ப இவ்வுலகவாழ்வை யொருவினர். இறக்கும்போது வயசு 70. இவ்வம்மையார் பெற்ற மக்கள் பதின்மர். இவ்வம்மையாரின் அந்திய கிரியைகள் வடபெரும்பாகப்பகுதி வித்தியாதரிசியாகக் கடமையாற்றி இளைப்பாறி யிருக்கும் பிரம ஸ்ரீ J. T. சதாசிவ ஐயர் அவர்களை ஆசாரியராகக்கொண்டு பலர் சமூகத்தில் அன்று மத்தியானம் பிள்ளைகளால் நடத்தப்பட்டன. இவ்வம்மையாரின் ஆன்மா இறைவன் திருவடியை எய்துக.

—கடித.

தானவரவு

இவாது சமக்கிரியையின்போது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றும்.

மனேஜர்


## தேவை

நாயன்மார்கட்டு ஐக்கிய பண்டசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. வியாபார அனுபவம் உடையவரா யிருத்தல் வேண்டும். பிணைப்பணம் ரூபா 500 மாத வேதனம் ரூபா 50. விண்ணப்பப்பத்திரம் நன்னடத்தைப் பத்திரத்துடன் 8-3-47 க்கு பிந்தாமல் மேற்படி சங்கக் காரியதரிசிக்கு அனுப்பவேண்டும்.

சி. சிவபாதசுந்தரம்

ஷை பண்டசாலைக் காரியதரிசி

நாயன்மார்கட்டு

24—2—47.

M. 330 25—28-2-47

## பரிசு ரூ. 1000 00

சாதாரண அறிவுப்போட்டி நிர் 2

முடிவுதேதி 5—3—47

சரியானவிடை சென்ரல் பாங்கியில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது விடையும் பரிசு பெற்றவர் ஜாபிதாவும் 12-3-47 வீரகேசரியில் வெளிவரும். விபரங்கட்கும், இலவசக் கூப்பன்கட்கும் "Leon Vil'a" Bolawatta, Dankolluwa என்னும் விலாசத்துக்கு எழுதவும்.

Mis 326 18—21


## மகா சிவராத்திரி

மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் மகாசிவராத்திரி தினம் (19-2-47) வித்தியாலய ஆசிரியர் C. K. சுந்தரசாஸ்திரி B A; B. T, அவர்கள் தலைமையில் கொண்டாடப் பட்டது- 12 மணிக்கு ஊர்வலம் முடிந்தபின், மாணவர்களது உபந்நியாசங்களும் பஜனைகளும் நடந்தன:

—நடித.

o

சித்தன்கேணியில் எழுந்தருளி யிருக்கும் சிவசிதம்பரேசுவரர் ஆலயத்தில் ஷை விழா சென்றபுதன்கிழமையிரவு (19-2-47) அவ்வூர் மக்களின் ஆதரவில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## துணைவர் வரு படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

சூரராக்கமுந் துணைவர்த மாக்கமுஞ் சூழுந்
தீரராக்கமும் வானவ ரேக்கமுஞ் சிதைய
ஆரராக்சமழ் கொன்றைவே ணியனரு ளதனல்
வீரராக்கதன வந்தனன் வயிரமேல் லியல்பால்.

சூரபன்மனுடைய செல்வமும் அவன் தம்பியருடைய செல்வமும், அச்சூரபன்மனுடைய அரச சுற்றத்தவராய்ச் சூழ்ந்துள்ளவர்களின் செல்வமும், தேவர்கள் கொண்டுள்ள பேரச்சமும் ஒழியும் வண்ணம், திருவாத்திமாலையும் பாம்பும் கொன்றைப்பூமாலையும் விளங்குகின்ற சடைமுடியையுடையவராகிய சிவபெருமானது திருவருளினால், வச்சிரவல்லி யென்னுஞ் சத்தியிடத்து வீரராக்கதரென்னும் வீரர்வந் தவதரித்தார் என்பது கருத்து.

தேடப்பட்டது தேட்டமென வந்தாங்கு, ஆக்கப்பட்டது ஆக்கமாயிற்று; இங்கே சூரபன்மன்முதலியோர் செய்த தவம் பெற்றவரம் அதிகாரம் முதலியனவெல்லாம் ஆக்கத்தின்பாற்படு மாதலினாலும், செல்வமுர் பொருட்செல்வத்தை மாத்திரமன்றிச் சகல பேறுகளையும் குறித்து நிற்குமாதலினாலும் ஆக்கமென்பதற்குச் செல்வமெனப் பொருள்கொள்ளப்பட்டது; துணைவரென்னுஞ் சொல் சகோதரரோடு உற்ற சுற்றத்தவராகிய மக்களையும் மந்திரமாலரையும் குறிக்குமென்க; அங்ஙனங் கொள்ளுமிடத்துச் 'சூழும் வீரரென்பதற்கு, சூரபன்மனைச் சூழ்ந்துள்ள ஏனைய அசுரவீரரெனப் பொருள் கொள்க; சூரபன்மன் முதலிய அசுரர்கள் தங்களுக்குச் செய்யு இன்னலையிட்டுத் துன்பமுறுந் தேவர்கள், அச்சூரபன்மன் முதலாம அசுரர்கள் மாளும்வழித் தங்கள் ஏக்கம் அறவே நீங்கப்பெறுவாராதலின் "வானவரேக்கமுஞ் சிதைய" என்றார். கமழ்தல் - பரிமளித்தல் (மணத்தல்) விளங்குதல் என்னும் இருபொருள் கொண்ட மொழியாதலின் ஆரும் கொன்றையும் பரிமளிக்க அரா விளங்க என ஏற்புடைப் பொருள் கொள்க. இனி, கொன்றைவேணி யென்பதில். கொன்றையை வேணிக்கு இயற்கை யடையாகக் கொள்ளினுமாம்; வீராக்கதன் - இராக்கதரை யடுரவீரன், கீழ்வரும் வீராந்தகன் என்னும் நாமத்திற்கும் ஈங்ஙனம் பொருள்கோடல் பொருந்துமென்க.

[சூர் - சூரன், பன்மை இழித்தற்கண் வந்தது; ஆர் - ஆத்தி] (30

காகதத்தனி மால்வரை யெடுத்தொரு கணத்திற்
புரகதத்தினை யிழைத்தவ னருளினாற் புணரிக்
குரகதத்திடைப் பைங்கனல் கொம்மென வெழல்போன்
மரகதத்திபால் வீரமார்த் தாண்டான்வந் தனனே.

கோபத்தினால் திருக்காத்திற் பெரிய மேருமலையைப்பற்றி ஒரு கணப்போதில முப்புரங்களையும் சிதைத்த சிவபிரானுடைய திருவருளினால், சமுத்திரத்தில் கண்ணே வடவாமுகாக்கினி பிறந்தவாறு, மரகதவல்லி யென்னுஞ் சத்தியிடத்து வீரமார்த்தாண்டர் என்னும் வீரர் வந்து தோன்றினர் எனபது கருத்து.

தனிமால்வரை - ஒப்புயர்வற்ற மேருமலை; புரஹதம் என்னும் வடமொழி புரகதம் என வந்ததென்டர், எனவே முப்புரங்களையும் சிதைத்தலைச் செய்து எனப் பொருள்கொள்ளப்பட்டது. குரகதத்திடைப் பைங்கனல் குதிரையினின்றுந் தோன்றும் வடவாமுகாக்கினி; கடலில் வடவாமுகாக்கினி பிறந்தவாறு, மரகதவல்லிபால் வீரமார்த்தாண்டர் வந்து பிறந்தாரென்றபடி; மரகதவல்லியின் நிறத்திற்குக் கடலும், வீரமார்த்தாண்டரின் வலிமை திறமைகட்கு வடவாமுகாக்கினியும் ஒப்பாகக் கூறப்பட்டனவெனக்கொள்க; அங்ஙனமன்றி வீரமார்த்தாண்டரின் நிறத்திற்குஒப்பாகக் கூறலாகாதோவெனின், மரகதவல்லியின நிறமே அச்சத்தியின் புதல்வராகிய வீரமார்த்தாண்டர்க்குமுண்டென்பது "தந்தமன்னையர் நிறங்கொடே" எனப் பின்னர்க் கூறப்படுதலால், நிறத்திற்கு ஒப்பாக வடவையனலைக் கொள்ளுதல் பொருந்தாதென விடுக்க. கரகத என்பதற்கு 'கையகப்பட்ட' எனப் பொருள்கோடல் பொருந்தாது.

[கரகதத்தனிமால்வரை யெடுத்து என்பதைக் கதத்துகரமால்வரை யெடுத்து எனக்கொண்டு கூட்டி, கோபத்தினாற் கையில் மேருமலை யெடுத்து எனப் பொருள்கொள்க] (31)

மையன் மால்கரி வாம்பரி விரவிய மணித்தேர்
வெய்ய தானவர் பஃறொகை யிமைப்பினில் விளிய
மொய்யி னார்த்தடு மானவன் பவளமா மொழிப்பேர்த்
தையல் தன்வயின் வலியவீ ராந்தகன் சனித்தான்.

மதச் செருக்கோடு கூடிய பெரிய யானைப்படையையும், தாவிச்செல்லுங் குதிரைப்படையையும், மணிகள் செறிந்த தேர்ப்படையையும் தறுகண்மையோடு கூடிய அசுர காலாட்படையையும் பல தொகுதியாக மாத்திரைப்போதில் மாளும்படி வலிமையோடு ஆரவாரித்து அழிக்கின்ற அபிமானத்தையுடையவராகிய திறமைவாய்ந்த வீராந்தகரென்பவர் பவளவல்லியாகிய சத்தியிடத்து வந்து தோன்றினர் என்பது கருத்து.

மணிவிரவிய தேர் - ஒலியைச் செய்கின்ற மணிகள் செறிந்துள்ள தேர்கள்: பகைவர்களாகிய அசுரருக்குரிய நால்வகைச் சைநியங்களின் தொகையினை அலுத்தலின்றி ஏககாலத்திலே மாத்திரைப் பொழுதில் அடவல்ல அபிமானியென்பார் "பஃறொகை யிமைப்பினில் விளிய மொய்யினார்த்தடுமானவன்..." என்றார். மொய் – வலிமை; இதனை "மெய்யிலார் மொய்கள் பெற்றும்" என ஆசாரிய சுவாமிகள் பின்னர்க் கூறியிருத்தலாற் காண்க. பவளமாமொழிப் பேர்த்தையல் - பவளம் என்னும் மொழியைத் தன் பெயராகக் கொண்ட சத்தி, பவளவல்லி என்றபடி. (32)

# பாகிஸ்தானே வேண்டும்!

## நேரு அறிக்கைபற்றி லீக்சர்கள் சந்தேகம்

இடைக்கால அரசாங்கத்திலுள்ள சகாக்களைக் கலந்தாலோசித்து பண்டித நேரு வெளியிட்டுள்ள அறிக்கை லீக் வட்டாரங்களின் சிரத்தையை அதிகம் ஈர்த்துள்ளது. இவ்வறிக்கை குறித்து உத்தியோக ரீதியான லீக் கருத்தை காரியசபை பின்னர் வெளியிடு மாயினும் "நேருஜீயின் அறிக்கை சமரச அம்சம் படைத்ததாய் உணர்ச்சியில் தோன்றுகிறது; ஆனால் சாரம் சமுசயமாயுள்ளது" என்ற கருத்து உத்தியோக ரீதியற்ற வட்டாரத்தில் கூறப்படுகிறது, இரு பிரதான வகுப்பினரின்— இந்துக்கள் முஸ்லீம்கள் — உண்மையான விடுதலை அடிப்படையில் லீக் எப்பொழுதுமே சமரசத்திற்கு ஆயத்தமாக இருந்துவந்திருக்கிறது என்பதாக முன் சொன்ன கருத்தை வெளியிட்டவர் சுட்டிக்காட்டுகிறார்.

அவர் மேலும் பின் வருமாறு கூறினார்:

"சென்ற காலங்களிலும் இதுபோன்ற பலவேண்டுதல்கள் காங்கிரஸால் வெளியிடப்பட்டபோதிலும் அவர்கள் அனுஷ்டானரீதியில் ஐக்கிய இந்தியா அடிப்படையில் பலம்பொருந்திய மத்திய நிர்வாகத்தை அமைக்கும் நோக்கத்தை ஒருபோதும் கைவிடவில்லை. இந்த நோக்கத்தினின்றும் காங்கிரஸ் மாறுவதை பண்டித நேரு அறிக்கை குறிப்பிடுமாயின், முஸ்லிம் லீக் இசைவின்றி நிற்பதைக் காணமுடியாது. தற்போதைய அரசியல் நிர்ணயசபை குறித்து அறிக்கையில் பண்டித நேரு கூறியிருப்பதானது, முஸ்லிம்லீக்கின் ஒத்துழைப்பு குறித்து அவர் குறிப்பிட்டுள்ளவற்றிற்குப் பொருத்தமற்றதாகவுள்ளது.

பிப்ரவரி மாசம் 20-ம் தேதி அறிக்கைமூலம் ஏற்பட்டுள்ள புதிய நிலையானது முற்றிலும் மாறுபட்டது. இது தற்போதைய அரசியல் நிர்ணய சபையின் சக்திக்குட்படாத புதிய முறையில் பிரச்னையை அணுகுகிறது. பிரச்னையை அணுகும் இப் புதிய முறையானது, இரு தனி ராஜ்யங்கள் பரஸ்பர நன்மையைக் கருதி தாமாகவே உடன்பாட்டிற்கு முன் வரும் அடிப்படையி லிருக்கவேண்டும். இந்தக் கொள்கையை காங்கிரஸ் ஏற்றமாத்திரத்திலே நிலைமை மாறிவிடும்; வெறுப்பும் நீங்கிவிடும்.

## ஸ்பெயினில் முடியாட்சி

ஸ்பெயினில் முடியாட்சி ஏற்படுத்தலாமா என்பதைப்பற்றி விசாரணைபுரிந்து ஓர் அறிக்கை விடுமாறு, நாலு பிரமுகரைக்கொண்ட ஓர் விசாரணைச் சபையை, ஸ்பெயின் சர்வாதிகாரியான பிராங்கோ சேனாதிபதி நியமித்திருக்கிறார்.

## புகைரதங்களின் சேவலநிலை

இப்போது உலகெங்கும் ஏற்பட்டுள்ள நிலக்கரி நெருக்கடியின் காரணமாக, இலங்கையில் இப்போது நிலக்கரி இருப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இப்போது இருக்கும் நிலக்கரி இன்னும் 10 தினங்கள்வரை தான் போதுமானது. இதற்கிடையில் நிலக்கரி கிடைக்காவிட்டால், புகைரதங்களின் சஞ்சாரம் நிறுத்தப்படலாம்.

# சிங்களம் கற்கவேண்டும்

## இந்திய மாணவர்க்குப் புத்திமதி

"இந்த நாட்டில் வதியும் சிங்களர், தமிழர், இஸ்லாமியர் என்னும் சாகியத்தார் பன்னெடுங்காலமாகத் தேனும்பாலும் போல வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இனியும் அவர்கள் ஏன் அப்படி வாழவொண்ணாது?" என்று கண்டி தர்மராஜக்கல்லூரிப் பிரதமாசிரியர் மிஸ்ரர் எஸ். ஏ. விஜயத்திலக, ஓர் இந்திய மாணவர் கூட்டத்திற் கூறினார்.

இன்னும் இன்று இலங்கையில் உள்ள இந்திய மக்கள் இந்த நாட்டைத் தாயகமாகக்கொண்டு சகல மக்களதும் பொது நன்மைக்காக உழைக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்திய மாணவர்கள் கட்டாயம் சிங்களம் கற்கவேண்டும் என்று ஸ்ரீ பெரிசுந்தரம் கூறினார்.

அரசாங்கசபையில் காங்கேசன் துறைப்பகுதிப் பிரதிநிதியாயுள்ள ஸ்ரீ நடேசன் இன்று இந்தியமக்களுக்கு இலங்கையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமாயின், அடுத்த பாராளுமன்றமே அதற்குத் தக்க இடம் என்று குறிப்பிட்டார்.

## பண மோசடி

இலங்கைப் பிரதம தபாற்கந்தோர் "மணியார்டர்" பகுதியில் நடந்ததாகக் கூறப்படும் ஒரு பண மோசடி சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு இலங்கை இரகசியப் பொலிஸ் அதிகாரி யொருவரும், தபாற்கந்தோர் விசாரணை அதிகாரி ஒருவரும் இந்தியாவுக்குச் சமீபத்தில் செல்வார்களெனத் தெரிகிறது. ஒன்றரை லட்சம் ரூபாய்க்குமேல் இம்மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. கொழும்பு வர்த்தக ஸ்தாபனமொன்றிலிருந்து மேற்படி தொகையைப் பெற்றுக்கொண்டதாக இலங்கைப் பிரதம தபாற்கந்தோர்க்குக் கிடைத்த பற்றுச்சீட்டுத்தான் இந்த மோசடியை வெளியாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## காந்திஜியை வங்கத்திலிருந்து அகற்ற

கிழக்கு வங்காளத்தில் மகாத்மா காந்தியடிகள் சுற்றுப் பிரயாணம் செய்வது முஸ்லிம் லீக்கினர்க்கு வெறுப்பாயிருக்கிறது. சென்றவாரம் அசாம் மாகாணத்தில், முஸ்லிம்லீக்கரின் மகாநாடு ஒன்று கூடி, காந்திஜியை கிழக்கு வங்கத்திலிருந்து உடனே அகற்றவேண்டும் என்று தீர்மானித்தனர்.

## பர்மாவுக்கு இந்தியத் துணிகள்

இந்த ஆண்டின் முதல் ஆறுமாதத்துக்கும் பர்மாவுக்கு 1 கோடி 50லட்சம் யார் துணிகள் கொடுக்க இந்தியா சம்மதித்துள்ளது.

## 1,265 ரூபா பெறுமதியான ஆபரணங்கள் களவு

யாழ்ப்பாணம் பெரியகடையில் ஸ்ரீ எஸ். இராசரத்தினம் என்பவரின் நகைக்கடையிலிருந்து சென்ற வியாழக்கிழமை யிரவு 1,265 ரூபா பெறுமதியான ஆபரணங்கள் களவாடப்பட்டதாகப் பொலிசார்க்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Mis 246 20-11-46—20-11-47 (தி)



# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். ரூ. ச. | வெளியூர். ரூ. ச. | மலாய்நாட்டுக்கு ரூ. ச |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


## அளவெட்டியில் தமிழ்க்கலை மன்றம்

தை மாதம் முப்பதாந்தேதி (12-2-47) புதன்கிழமை இரவு 6 மணிக்கு இம்மன்றத்தாரின் கூட்டமொன்று, மன்றத் தலைவர் பண்டிதமணி திரு. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் தலைமையில் அளவெட்டி மஹாஜனசபை வாசகசாலை மண்டபத்தில் ஆரம்பமாயிற்று.

மன்ற அமைச்சர் திரு. அ. பொ. அருணாசலமவர்கள் தலைவரவர்களையும் மற்றும் சொற்பொழிவாளர்களையும் பெரியோர்களையும் வரவேற்றார். தலைவரவர்கள் தமிழ்க்கலை மன்றத்தின் இன்றியமையையும் அஃதாற்றவேண்டிய சற்கருமங்களையும் தமிழர்களனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிகளையும் தம் தலைமைப் பேருரையானே நன்கு விரித்துக்கூறினார். வித்துவான் பண்டிதர் திரு. க. வேந்தனாவர்கள் "பண்டைத் தமிழர்" என்னும் பொருள்பற்றிப் பேசினார். பேராசிரியர் V. J. யோன் பிள்ளையவர்கள் "தமிழருங் கலையுணர்ச்சியும்" என்னும் பொருள்பற்றி விரித்துரைத்தார். பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள் "எதிர்காலத் தமிழன்" என்பது விஷயமாகப் பேசினார்கள். மாவை வித்துவான் பிரமஸ்ரீ செல்லக்குருக்களவர்கள் சங்கத்தின் வாழ்வு கண்ணிய நல்லுரை பகன்றார். பண்டிதர் க. நாகலிங்கம் அவர்கள் பலருக்கும் நன்றியுரை கூற 11 மணியளவில் கூட்டம் முடிவுற்றது. இம் மன்றத்தார் சித்திரைமாதம் ஒரு மகாநாடு கூட்ட ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

—கடித.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மகாசிவராத்திரி

இந்துக்கல்லூரி சைவ இளைஞர் சங்க ஆதரவில் மேற்படி சிவராத்திரி சென்ற புதன்கிழமை (19-2-47) அன்றிரவு கல்லூரி மண்டபத்திற் கொண்டாடப்பட்டது.

வித்துவான் க. கார்த்திகேசு அவர்கள் "தேவார மகிமை" பற்றி ஓர் சொற்பொழிவாற்றினார். பின் ஸ்ரீமான் சே. க. சண்முகம்பிள்ளை அவர்கள் "சிவபக்தி"யெனும் பொருள்பற்றிப் பேசினார். அதன்பின் நீராவிமடம் ஸ்ரீமத் ந. சோமசுந்தரக்குருக்களால் "சிவபரத்துவம்" எனுஞ் சொற்பொழிவாற்றப்பட்டது. பின், கந்தபுராண "அடிமுடி தேடு படலம்" புராணபடனஞ் செய்யப்பட்டது.

தேசிகர் மூ. சுப்பையா அவர்கள் தேவாரபாராயணஞ் செய்தார். திரு. வ. சுப்பிரமணியம் அவர்களால் திருப்புகழ்பாராயணஞ் செய்யப்பட்டது. நான்கு யாமமும் ஸ்ரீ நடராசருக்கு விசேஷ பூசை நிகழ்த்தப்பட்டது.

காலை 5-30 அளவில் பூசை முதலியன நிறைவேறின.

## 5 லட்சம் ரூபா

புதிதாக அநுட்டானத்தில் வரவிருக்கும் தமாஷ்வரியினால் கொழும்பு நகரசங்கத்துக்கு ஆண்டுதோறும் 5 லட்சம் ரூபா கிடைக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.


# பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்



# கந்தசாமி வைத்தியர்

## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நாசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசிரணம் இவைகளை மாற்றி நல்ல பசிஉண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)



# India Super Tyres and Tubes

## இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்

கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந்உ யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால்
தேவையானதற்கு இப்பொழுதே உங்கள்
பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

C. S. Nadarajah Chetty,
41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47



# NEW IRON SAFES FOR SALE

## புதிய இரும்புப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele {Phone 68
{grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12-46—12-3-47


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, February, 25, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org